யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 11
## First Term Examination – 2020 – Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| கத்தோலிக்கத் திருமறை I, II<br>Catholicism I, II | 14 | T | I, II | மூன்று மணித்தியாலம்<br>Three Hours |

சுட்டெண்
Index No

## கத்தோலிக்கத் திருமறை

### பகுதி I

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

01. ஆண்டவராகிய கடவுள் என்பதைக் குறிக்கும் மரபு
    1. எலோயிம் மரபு 3. குரு மரபு
    2. யாவே மரபு 4. எலோகிம் மரபு

02. தோரா என்பதன் மறு பெயர்.
    1. வேதாகமம் 2. திருச்சட்டநூல் 3. வரலாற்றுநூல் 4. நற்செய்திநூல்

03. யாக்கோபு கனவுகண்ட இடத்தின் பெயர் யாது
    1. பெனயல் 2. கானான் 3. பெத்தல் 4. எகிப்து

04. திருவிவிலிய நூல்களின் மொத்த எண்ணிக்கை யாது
    1. 66 2. 73 3. 27 4. 39

05. யூதர்களும் கிரேக்கர்களும் பயன்படுத்திய பழைய ஏற்பாட்டு எபிரேயப்பகுதி எவ்வாறு அழைக்கப்படும்
    1. வல்கேற் 2. கும்ரான் ஏடு 3. மசோரோடிக் பிரதி 4. தோரா

06. ‘நபி’ என்ற எபிரேயச் சொல்லின் பொருள் யாது
    1. இஸ்ரேயலின் இறைவாக்கினர் 2. இறைசித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பவர்
    3. ஒருவருக்காக பேசுபவர் 4. அபிஷேகம் செய்யப்பட்டவர்

07. பெரிய இறைவாக்கினர் எனப்படுவோர்
    1. ஆமோஸ்,யேரனா,எசாயா 2. எசாயா, ஆமோஸ், மீக்கா
    2. 3. எசாயா,எரேமியா,எசேக்கியல் 4. மீக்கா, ஆமோஸ், ஆகாய்

08. “இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்” என்ற கூற்றுடன் தொடர்புடைய இறைவாக்கினர்.
    1. எரேமியா 2. எசேக்கியல் 3. ஆமோஸ் 4. எசாயா

09. இறைவன் எசேக்கியல் இறைவாக்கினருக்கு எதன் மூலம் தனது செய்தியை வழங்கினார்
    1. அடையாளம் 2. காட்சி 3. கனவு 4. நேரடி அழைப்பு

10. “தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்க முன்பே அறிந்திருந்தேன்”
    1. எசாயா 2. எரேமியா 3. எசேக்கியல் 4. ஆமோஸ்

11. மாற்க நற்செய்திக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
    1. பெண்களின் நற்செய்தி 2. இறையாட்சியின் நற்செய்தி
    3. பாடுகளின் நற்செய்தி 4. செபத்தின் நற்செய்தி

12. இயேசுவை புதிய மோசேயாகவம் மெசியாவாகவும் காட்டுவதை நோக்கமாகக் கொண்ட நற்செய்தியாளர்
    1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

13. லூக்கா நற்செய்திக்கு வழங்கப்படும் அடையாளம் எது?

1. சிங்கம் 2. மனிதமுகம் 3. எருது 4. கழுகு

14. லூக்கா நற்செய்தியாளரால் எழுதப்பட்ட வேறு நூல் எது?

1. திருப்பாடல் 2. திருத்தூதர்பணி 3. திருவெளிப்பாடு 4. திருமுகங்கள்

15. யோவான் தனது நற்செய்தியை எழுதியதன் நோக்கம்

1. துன்புற்ற கிறிஸ்தவர்களை ஊக்குவித்தல்
2. இயேசுவை புதிய மோசேயாக காட்டுதல்
3. இயேசு உலகிற்கெல்லாம் மீட்பர் என எடுத்துக்காட்டல்
4. இயேசு இறைமகனாகிய மெசியா எனும் நம்பிக்கையை ஏற்படுத்துவது

16. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என தொடக்கநூலில் கூறப்படும் அதிகாரங்கள் எவை?

1. தொ.நூ1-5 2. தொ.நூ1-11 3. தொ.நூ5-11 4. தொ.நூ1-31

17. திருவிவிலியத்தின் மூல ஆசிரியர் யார்?

1. மனிதன் 2. இறைவாக்கினர் 3. இறைவன் 4. பவுல்

18. படைப்புக்களில் மிகவும் மேன்மையானது

1. சூரியன் 2. சந்திரன் 3. உயிரினங்கள் 4. மனிதன்

19. ஆதிப்பெற்றோரை விலக்கப்பட்ட கனியை உண்ணத் தூண்டிய காரணம்

1. தகுதி 2. பதவி 3. ஆசை 4. தாழ்மை

20. சமூக நீதியின் இறைவாக்கினர் யார்

1. ஆமோஸ் 2. எசாயா 3. எசேக்கியேல் 4. தானியேல்

A- உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்

B- உன் வாழ்நாள் எல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து உண்பாய்

C- மண்ணுலகில் நீ நடோடியாக அலைந்து திரிவாய்

21. இறைவன் ஏவாளுக்கு கொடுத்த தண்டணையைக் குறிக்கும் எழுத்து

1. B 2. C 3.A 4. A யும் B யும்

22. இறைவன் காயினுக்கு கொடுத்த தண்டணையைக் குறிக்கும் எழுத்து

1. C 2. B 3.A 4. A யும் C யும்

23. இறைவன் ஆதிப்பெற்றோருக்கும் காயினுக்கும் தண்டணை கொடுத்தது

1. கோபத்தால் 2. அன்பினால் 3. வெறுப்பினால் 4. பயத்தினால்

24. பெருவெள்ளத்திலிருந்து காப்பற்றப்பட்ட நீதிமான்

1. ஆபிரகாம் 2. நோவா 3. மோசே 4. யோனா

25. “உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ………………… வழங்குவேன்” இடைவெளிக்கு பொருத்தமான சொல்

1. நாடு 2. ஆசி 3. இனம் 4. வாக்குறுதி

26. இஸ்ரேயல் மக்களை எகிப்திலிருந்து மீட்க அழைப்பு பெற்றவர்

1. மோசே 2. ஆரோன் 3. லாபன் 4. யோசுவா

27. பந்து வாதைகளுள் கல்மழை, காரிருள் எத்தனையாவது வாதை

1. 2,3 2. 4,5 3. 7,9 4. 1,10

28. ஆண்டவர் எகிப்திய மக்களுக்கு கொடுத்த பத்தாவது வாதை எது?

1. கால்நடை சாவு 2. வெட்டுக்கிளி பரம்பல் 3. கல்மழை 4. தலைமகன் சாவு

29. குடிக்கத்தண்ணீர் இல்லாமல் இருந்த இஸ்ரேயல் மக்களுக்கு தண்ணீர் கிடைத்த இடங்கள் எவை

1. மாரா 2. மரசா மெரிபா 3. பெத்தல் சீனாய் 4. மிதியான்

30. இஸ்ரேயல் கோத்திரங்கள் எத்தனை

1. 5 2. 6 3. 12 4. 10

31. உடன்படிக்கைக்கு எற்ப வாழ்வதற்கு இஸ்ராயேல் மக்களுக்கு வழங்கப்பட்டது

1. இறையாசீர் 2. பத்துக்கட்டளை 3. விருத்தசேதனம் 4. மன்னாஅப்பம்

32. திருமுழுக்கு வார்த்ததைப்பாடுகளில் அடங்காதது

1. சாத்தானையும் செயல்களையும் விட்டுவிலகுதல்
2. இறைவனின் பிள்ளைக்குரிய தன்மையை பாதுகாப்போம்
3. இறைவனில் நம்பிக்கை வைப்போம்
4. ஓய்வு நாளை கடைப்பிப்போம்

33. இறைவன் யாருடன் செய்த உடன்படிக்கையில் வெளி அடையாளம் வானில்

1. ஆதிப்பெற்றோர் 2. ஆபிரகாம் 3. நோவா 4. மோசே

34. "தம்மிடம் நம்பிக்கை உண்டு என சொல்லும் ஒருவன் அதை செயலில் காட்டாவிட்டால் பயன் என்ன?" இக்கூற்று காணப்படும் பகுதி

1.லூக்கா 2. மத்தேயு 3. யாக்கோபு 4. பேதுரு

35. புதுப்படைப்பின் ஆரம்ப கர்த்தா யார்

1. ஆதாம் 2. ஆபிரகாம் 3. கிறிஸ்து 4. நோவா

36. இணைத் திருமறை நூல்களில் அடங்காதது

1. யோபு 2. சாலமேனின் ஞானம் 3. சீராக்கின் ஞானம் 4. தோபித்

37. ஏட்டுச்சுருளைத் தின்று உன் வயிற்றை நிரப்பு என யாருக்கு கூறப்பட்டது

1. எசேக்கியேல் 2. எரேமியா 3. எசாயா 4. ஆமோஸ்

38. தொலமி அரசன் எத்தனை சட்டவல்லுனர்களை கிரேக்க மொழிபெயர்ப்புக்கு தேர்ந்தெடுத்தான்

1. 38 2.27 3. 72 4. 56

39. யோவான் நற்செய்தி எழுதப்பட்ட காலம்

1. கி.பி 64-66 2. கி.பி 80-90 3. கி.பி 80-85 4. கி.பி 90-100

40. சபாத் பற்றிக் கூறும் மரபு

1. J 2. P 3. E 4. D

$(40 \times 1 = 40)$

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. 1. ஐந்து நூல்களும் எவை?
    2. யாவே மரபிற்குரிய கதைகள் மூன்றும் எவை?
    3. ஐந்து நூலை கற்பதால் மாணவராகிய நீர் அடையும் பயன்கள் எவை?

$$(\mathbf{2+3+5=10})$$

02. 1. செப்துவாஜிந் என்றால் என்ன?
    2. இணைத்திருமறை நூல்களைத் தருக?
    3. இணைத்திருமறை நூல்கள் இறை ஏவுதலால் எழுதப்பட்டமைக்கான சான்றுகளைக்குறிப்பிடுக?

$$(\mathbf{2+3+5=10})$$

03. 1. இஸ்ராயேல் இறைவாக்கினரின் இருவகைகள் எவை?
    2. இறைவாக்கினர்கள் இறைவாக்கு உரைக்கும் போது பயன்படுத்திய சொற்பதங்கள் எவை?
    3. உமது வாழ்வில் இறைவார்த்தையை எடுத்துரைக்க கிடைத்த சந்தர்ப்பங்கள் எவை?

$$(\mathbf{2+3+5=10})$$

04. 1. மாற்று நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் யாது?
    2. லூக்கா செய்தியின் வேறு பெயர்களை எழுதுக?
    3. நான்கு நற்செய்தி நூல்களை குறிப்பிட்டு அவற்றின் முக்கிய நோக்கத்தை எழுதுக?

$$(\mathbf{2+3+5=10})$$

05. 1. ஆபிரகாமை அழைத்த இறைவன் அவருக்கு வழங்கிய ஆசிகள் எவை?
    2. இஸ்ராயேல் மக்கள் விடுதலைப்பயணத்தில் அனுபவித்த இறைபராமரிப்பு சந்தர்ப்பங்களை எழுதுக?
    3. இன்றைய சமுதாயத்தில் வாழும் இளையோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எவை?

$$(\mathbf{2+3+5=10})$$

06. சிறுகுறிப்பு எழுதுக.
    1) துயருறுவோர் ஆண்டு
    2) தலைமை ஆயர் 1ம் பிரான்சிஸ்
    3) திருச்சபையில் பொதுநிலையினர்
    4) அன்பிய குழும வாழ்வு

$$(\mathbf{2\frac{1}{2}\times 4=10})$$